கடலூர் மாவட்டத்தில்

காலநிலை மாற்றத்தினால் பாதிக்கக்கூடிய கிராமங்கள்: கூடுதல் தலைமை செயலாளர் சுப்ரியா சாஹூ ஆய்வு

கடலூர், செப். 23–

கடலூர் மாவட்டம் காலநிலை மாற்றத்தினால் பாதிப்பு ஏற்படக்கூடிய கிராமங்களை காலநிலை மீள்திறன்மிகு கிராமங்களாக மாற்றும் நடவடிக்கைகள் குறித்து கிள்ளை, பிச்சாவரம் பகுதியில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை மற்றும் வனத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாஹூ கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநர் ராகுல்நாத் முன்னிலையில் ஆய்வு செய்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்தால் பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளாக பல்வேறு மாவட்டங்களில் 11 பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளது. இதில் ஒரு பகுதியாக கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம் வட்டத்திற்குட்பட்ட கிள்ளை பேரூராட்சி இடம்பெற்றுள்ளது. இதுபோன்று சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகளில் இருந்து மீட்பதற்காக அப்பகுதிகளில் தமிழ்நாடு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையின் மூலம் காலநிலை மீள்திறன்மிகு கிராமங்களாக மாற்றுவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் முக்கிய அம்சங்களாக தற்போது கிள்ளை பிச்சாவரம் பகுதியில் காலநிலை மீள்திறன் கிராம அலுவலகம் அமைத்தல், பக்கிங்காம் கால்வாய் தூர்வாருதல், சதுப்புநில காடுகளை மேம்படுத்தும் விதமாக அலையாத்தி செடிகள் நடவு செய்தல், பிச்சாவரம் படகு இல்லத்தில் மின் படகுகள் மூலம் பசுமை சுற்றுலாவை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு வகையான சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் அப்பகுதி மக்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் ஆகிய முன்னெடுப்புகளை காலநிலை மீள்திறன்மிகு கிராம திட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட உள்ளன.

இவ்வாறு அவர் கூறினார்.

ஆய்வின் போது முதன்மை தலைமை வன பாதுகாவலர் ஸ்ரீனிவாஸ் ஆர்.ரெட்டி, முதன்மை தலைமை வன அலுவலர் மற்றும் தலைமை வனவிலங்கு காவலர் ரகேஷ்குமார் டோக்ரா, மாவட்ட வன அலுவலர் எஸ்.குருசாமி, காலநிலை மாற்றதிற்கான ஆட்சி மன்ற குழு உறுப்பினர்கள் சௌமியா சாமிநாதன், ரமேஷ் ராமச்சந்திரன், எரிக் சோலஹிம், நிர்மலா ராஜா, சுந்தர்ராஜன், கலையரசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சென்னையை அடுத்த போரூரில் அமைந்துள்ள சிந்தி கல்லூரியில் இந்திய இலக்கியம் மற்றும் அத்துறையை சார்ந்த கல்விக்கான உலகளாவிய மாநாடு நடைபெற்றது. மாநா டாக்டர் அன்வர் சதத், புது கல்லூரி தலைவர் டாக்டர் பி.நேரு, உஸ்பெஸ்தான் நாட்டில் அமைந்துள்ள சாம்ராம் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ஜிசாக்ஸ், டி.ஜி.வைஷ்ணவா கல்லூரி பேராசிரியர் டாக்டர் பிரவின் பிரபு மற்றும் பலர் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டிற்கு வந்த விருந்தினர்களை சிந்தி கல்லூரியின் செயலாளர் ஜே.சி.பிரகாஷ் வரவேற்றார். முதல்வர் டாக்டர் கி.பிரகலாதன் மற்றும் துணை முதல்வர் டாக்டர் எஸ்.ஷோபானா விழாவிற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

சென்னை பல்கலைக்கழகத்தில் நடந்த "கலாச்சாரம், காலநிலை, அண்டம்" குறித்த மாநாடு: 57 கட்டுரைகள் சமர்ப்பிப்பு

University of Madras Department of Anthropology
&
Vanamaa Art, Educational and Cultural Trust, Chennai
International Conference on
Culture, Climate & Cosmos
September 2025
Director and
Dr. M.P. D
Head, Department
University of
Chepauk Campus, Ch
Kalaimamani
Smt. A

சென்னை, செப். 23–

சென்னை பல்கலைக்கழக மானுடவியல் துறை மற்றும் வனமா கலை, கல்வி மற்றும் கலாச்சார அறக்கட்டளை இணைந்து, "கலாச்சாரம், காலநிலை மற்றும் அண்டம்" என்ற கருப்பொருளில் 3 நாள் சர்வதேச கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்திருந்தன. இந்தக் கருத்தரங்கம் கலாச்சாரம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் அண்டம் குறித்த புரிதலை மானுடவியல் கண்ணோட்டத்தில் ஆராய்வதை நோக்கமாகக் கொண்டது.

மாநாட்டின் துவக்க விழாவில், சென்னை நந்தனம் அரசு கலைக் கல்லூரி வரலாற்றுத் துறை இணைப் பேராசிரியர் பிரபு குமாரி வனமா வரவேற்று பேசினார். சென்னை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மற்றும் ஆங்கிலத் துறை தலைவர் டாக்டர் எஸ். ஆம்ஸ்ட்ராங், மாநாட்டைத் தொடங்கி வைத்தார். மேற்கத்திய நாடுகளில் உள்ள அளவுக்கு மானுடவியல் மற்றும் தொல்லியல் துறைகள் இந்தியாவில் அங்கீகாரம் பெறுவதில்லை என்றும் "கலாச்சாரம் இல்லாமல், இந்த உலகில் மானுடம் இருக்க முடியாது" என்றும், "ஒவ்வொரு நாடும் தாய் பூமியைக் காக்க ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்" என்றும் வலியுறுத்தினார்.

57 கட்டுரைகள் சமர்ப்பிப்பு

அரசு கலைக் கல்லூரி முதல்வர் டாக்டர் டி. தங்கராஜன், மூன்று 'C'க்கள் (*Culture, Climate, Cosmic*) குறித்து விரிவாகப் பேசினார். அதைத் தொடர்ந்து, கேரளப் பல்கலைக்கழகத்தின் மானுடவியல் துறை முன்னாள் தலைவர் டாக்டர் எஸ். கிரிகோரி, மானுடவியலின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பேசினார். கலைமாமணி ஆச்சார்யா சூடாமணி அனிதா குஹா சிறப்பு மலரை வெளியிட்டார். "கலை, நாம் இன்னும் பலவற்றைச் செய்யத் தூண்டுகிறது" என்று அவர் கூறினார்.

மானுடவியல் துறைத் தலைவர் மற்றும் மாநாட்டு இயக்குநர் டாக்டர் எம்.பி. தாமோதரன் தலைமை உரையாற்றினார். அண்டத்துடன் இணக்கமாக வாழ்வதன் முக்கியத்துவத்தைப் பற்றிப் பேசிய அவர், மானுடவியல் துறை 85 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளதாக பெருமையுடன் தெரிவித்தார்.

3 நாள் சர்வதேச மாநாடு செப்டம்பர் 17 ந்தேதி தொடங்கி சென்னை பல்கலைக்கழக வளாகத்தில் நிறைவடைந்தது. சென்னை பல்கலைக்கழகப் பதிவாளர் டாக்டர் ரீட்டா ஜான் நிறைவுரையாற்றினார். இந்த மாநாட்டில், பல்வேறு துறைகளைச் சேர்ந்த 57 கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. 300க்கும் மேற்பட்ட கல்வியாளர்கள் இந்த விவாதங்களால் பயனடைந்தனர்.

வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் டீன் டாக்டர் சி. ஜோதி வெங்கடேஸ்வரனுக்கு வாழ்நாள் சாதனையாளர்விருதுவழங்கப்பட்டது. வெங்கட் ஆடிசேஷையா இந்த விருதை வழங்கினார். மாநாட்டில் பங்கேற்றவர்களுக்கு, வெங்கட் ஆடிசேஷையா சான்றிதழ்களை வழங்கினார்.

ஜவஹர் வித்யாலயா மேல்நிலைப் பள்ளி 59வது ஆண்டு விழா கலை நிகழ்ச்சி

சென்னை அசோக் நகரில் உள்ள ஜவஹர் வித்யாலயா பள்ளி தனது 59வது ஆண்டு விழாவை மஹோதயா அரங்கில் நடத்தியது. பள்ளியின் முன்னாள் மாணவி வாணிப்பிரியா ஜெயராமன் நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தார். பரதநாட்டியம், கிராமீய நாட்டியம், நாடகம் மற்றும் மேற்கத்திய நடனத்தை சிறுவர்கள் நடத்திக் காட்டினார்கள். பள்ளி கலைத்துறை செயலாளர் கிருத்திகா நன்றி கூறினார். கலை நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களுக்கு டாக்டர். ஆர்.எஸ்.ரங்கன் பரிசுகளை வழங்கினார்.

நவராத்திரி கோலாகல ஆரம்பம்: வடபழனி முருகன் கோவிலில் 'சக்தி கொலு'

சென்னை, செப்.23

வடபழனி முருகன் கோவிலில் 'சக்தி கொலு' விழா நேற்று தொடங்கியது. லலிதா சகஸ்ரநாம பாராயணம், வேதபாராயணம், திருமுறை பாராயணம், மகளிர் குழுவினர் கொலுபாட்டு நடந்தது.

தொடர்ந்து, பரதநாட்டிய நிகழ்ச்சியும், இரவு 7 மணிக்கு நாமசங்கீர்த்தனம், இசை கச்சேரி, ஆன்மிக சொற்பொழிவு நடந்தது. திரளான பக்தர்கள் கலந்துகொண்டு பார்வையிட்டனர்.

நவராத்திரியின் 10 நாளில் தினமும் காலை 11 மணி முதல் 11.30 மணி வரை மற்றும் மாலை 6 மணி முதல் 6.30 மணி வரை வீற்றிருக்கும் அம்மனுக்கு கொலு மண்டபத்தில் சிறப்பு பூஜை மற்றும் தீபாராதனை நடத்தப்படுகிறது. நவராத்திரி சிறப்பு நிகழ்வாக, மீனாட்சி அம்மனுக்கு, 26 ந்தேதி காலை 7.30 மணியிலிருந்து பகல் 12 மணிவரையிலும், மாலை 4.30 மணியிலிருந்து இரவு 8.30 மணி வரையிலும் ஏகதின லட்சார்ச்சனை நடக்க உள்ளது. தினமும் மாலை 5 மணி முதல் இரவு 7 மணிவரை லலிதா சகஸ்ரநாம பாராயணம், வேதபாராயணம், திருமுறை பாராயணம், மகளிர் குழுவினர் கொலுபாட்டு நடத்தப்படுகிறது.

வருகிற 28ந் தேதி மாலை 6 மணி முதல் இரவு 7 மணிவரை சிறப்பு திருமுறை பாராயணம், 29ந்தேதி மாலை 4.15 மணிக்கு மகளிரின் லலிதா சகஸ்ரநாம பாராயணம் நடக்கிறது. விழா நாட்களில் மாலை 6 மணிக்கு பரதநாட்டிய நிகழ்ச்சிகள், இரவு 7 மணிக்கு நாமசங்கீர்த்தனம், இசைகச்சேரி, ஆன்மிக சொற்பொழிவுகள் நடக்கிறது.

நவராத்திரியின் நிறைவு பகுதியாக அக்டோபர் 2ந் தேதி, 'வித்யாரம்பம்' எனும் நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. இதில், இரண்டரை வயது முதல் மூன்றரை வயது வரை உள்ள குழந்தைகளின் விரல் பிடித்து, ஆரம்ப கல்வியை தொடங்கும் நிகழ்வு நடக்க உள்ளது. கொலு கண்காட்சி நேரத்தில் ஆன்மிக வினாடி வினா நடத்தப்பட்டு பரிசுகளும் வழங்கப்படுகிறது. பார்வையாளர்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டு வருகிறது.

விழா ஏற்பாடுகளை கோவில் தக்கார் ஆதிமூலம், துணை கமிஷனர் ஹரிஹரன் உள்பட பலர் செய்திருந்தனர்.

தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாபெரும் கண் பரிசோதனை முகாம்

விழுப்புரம், செப். 23–

தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), இ.எஸ். செவிலியர்கல்லூரிமற்றும்அகர்வால் கண் மருத்துவமனை ஆகிய நிறுவனங்கள் இணைந்து நடத்திய மாபெரும் கண் பரிசோதனை முகாம் விக்கிரவண்டி வி.சாலையில் உள்ள இ.எஸ். செவிலியர் கல்லூரியில் நடைபெற்றது.

இம்முகாமில் இ.எஸ். கல்விக்குழுமங்களின் முதன்மை செயல் அலுவலர் செ. விக்ரம் ஹரிகரன் பங்கேற்று அகர்வால் கண் மருத்துவமனையில் இருந்து வருகைபுரிந்த பரிசோதனை நிபுணர்களுக்கு நினைவுப்பரிசுகள் வழங்கி, இம்முகாம் சிறப்புற நடைபெற தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார்.

கிட்டப்பார்வை, தூரப்பார்வை, வெள்ளெழுத்து, தலைவலி, கண்வலி, கண் எரிச்சல், கண்களில் நீர் வடிதல் மற்றும் மேலும் பல கண் சார்ந்த குறைப்பாடுகளுக்கு இம்முகாமில் கண் பரிசோதனை பார்க்கப்பட்டது. 175க்கும் மேற்பட்ட ஊர் பொதுமக்கள் பங்கேற்று இலவச கண் பரிசோதனையுடன், சலுகை விலையில் கண் கண்ணாடிகளும் அகர்வால் மருத்துவமனையில் பெற்றுக்கொள்ள வழிவகைச் செய்யப்பெற்றது.

இம்முகாமில் பங்கேற்ற அனைத்து ஊர்பொதுமக்களுக்கும் கல்லூரி நிர்வாகத்தின் சார்பாக பேருந்துவசதி, மருத்துவ அட்டை, கோப்பு மற்றும் மதிய உணவு ஆகியவை அளிக்கப்பட்டது.

இம்முகாமிற்கு தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியின் மாணவியர் புலமுதன்மையர், நிர்வாக அலுவலர், கூடுதல் சேவை அமைப்பின் ஒருங்கிணைப்பாளர்கள், பேராசிரியப்பெருமக்கள், இ.எஸ். செவிலியர் கல்லூரியின் முதல்வர், பேராசிரியர்கள் மற்றும் செவிலியர் பயிற்சி மாணவியர்கள் ஆகியோர் பங்கேற்று ஊர்பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சிறப்புறச் செய்தனர்.

பட்மேடு ஜி.கே.எம். காலனி ஸ்ரீ வரலட்சுமி – ஸ்ரீ சக்தி – ஸ்ரீ சரஸ்வதி ஆலயத்தில் நவராத்திரி விழா



சென்னை, செப். 23–

சென்னை பட்மேடு ஜி கே எம் காலனி 36 வது தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ வரலட்சுமி ஸ்ரீ சக்தி ஸ்ரீ சரஸ்வதி ஆலயத்தில் 11ம் ஆண்டு நவராத்திரி கொலு கண்காட்சி திருவிழா நேற்று (22 ஆம் தேதி) முதல் துவங்கியது. அடுத்த மாதம் 2 ந் தேதி வரை 10 நாட்கள் வெகு விமரச்சையாக நடைபெறுகிறது.

ஸ்ரீ லட்சுமி – ஸ்ரீ சக்தி – ஸ்ரீ சரஸ்வதி ஆகிய முப்பெரும் தேவியரின் திருவருள் துணை கொண்டு ஆன்மீக கொடை வள்ளல் டி.கே. இராஜா பாதர் செட்டியாரின் மகன் டி ஆர் வேலுமணி – வி.லட்சுமி தம்பதியரால் கட்டப்பட்ட நவராத்திரி கோவிலில் ஆண்டுதோறும் நவராத்திரி உற்சவம் வெகு விமர்சையாக நடைபெற்று வருகிறது.

அதே போல் இந்த ஆண்டும் நவராத்திரி உற்சவம் நேற்று 22–ந் தேதி மாரியம்மன் அலங்காரம் நடந்தது. இரண்டாம் நாள் ஸ்ரீ வராகி அம்மன் அலங்காரமும், மூன்றாம் நாள் ஸ்ரீ அன்னபூரணி அலங்காரமும், நான்காம் நாள் ஸ்ரீ பிரத்தியங்கிரா தேவி அலங்காரமும், ஐந்தாம் நாள் ஸ்ரீ மகாலட்சுமி அலங்காரமும், ஆறாம் நாள் ஸ்ரீ வைஷ்ணவி அலங்காரமும், ஏழாம் நாள் ஸ்ரீ விசாலாட்சி அம்மன் அலங்காரமும்,

எட்டாம் நாள் ஸ்ரீ சிவன் பார்வதி அலங்காரமும், ஒன்பதாம் நாள் ஸ்ரீ புவனேஸ்வரி அலங்காரமும், பத்தாம் நாள் ஸ்ரீசரஸ்வதி அலங்காரமும், பதினோராம் நாள் ஸ்ரீ மகிஷாசுரவர்த்தினி அலங்காரமும் வெகு விமர்ச்சையாக நடைபெறுகிறது.

பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு ஸ்ரீ லட்சுமி ஸ்ரீ சக்தி ஸ்ரீ சரஸ்வதி அம்பாள்களின் அருளைபெபற்று வருகிறார்கள்.

நவராத்திரி திருவிழா ஏற்பாடுகளை ஆர். ஆர் ஆன்மீக அறக்கட்டளை நிர்வாகிகள் மற்றும் டி .ஆர் குணசேகர் எல். கஜேந்திரன் ஆர். குமரன் ஆர். பார்த்திபன் ஜி. குமரேசன் ஆலய அர்ச்சகர் வி அரவிந்த் ஆகியோர் சிறப்பான முறையில் செய்து வருகிறார்கள்.

அபான் ஆஃப்ஷோர் லிமிடெட்
aban
பதிவு அலுவலகம்: ''ஜனப்ரியா கிரஸ்ட்'', 113, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை—600 008.
Website: www.abanoffshore.com; Tel No.044-49060606; Fax:044-28195527 CIN:L01119TN1986PLC013473

மாண்புமிகு NCLT, சென்னையால் நியமிக்கப்பட்ட இடைக்காலத் தீர்மான நிபுணர் இதுவரை நிறுவனத்தின் விவகாரங்களில் பொறுப்பேற்காததால், 24 செப்டம்பர், 2025ம் தேதி நடைபெறவிருந்த எங்கள் வருடாந்திரப் பொதுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. வருடாந்திரப் பொதுக் கூட்டத்தின் திருத்தப்பட்ட தேதி உரிய நேரத்தில் அறிவிக்கப்படும்.

அபான் ஆஃப்ஷோர் லிமிடெட்டிற்காக
இடம்: சென்னை **ஒப்பம்/– S.N. பாலாஜி**
தேதி: 22.09.2025 **உதவி பொது மேலாளர் (சட்டம்) மற்றும் செயலாளர்**